ORIGINAL ARTICLE

# சிலப்பதிகாரக் காப்பியத் தெய்வத் தொடர்புடைய கூறுகளை மலேசியா இந்திய சமூகத்தோடு ஓர் ஆய்வு

## [CILAPPATIKĀRAK KĀPPIYAT TEYVAT TOṬARPUṬAIYA KŪṞUKAḶAI MALĒCIYĀ INTIYA CAMŪKATTŌṬU ŌR ĀYVU]

## A STUDY ABOUT GODNESS ELEMENTS SIMILARIETIES BETWEEN EPIC SILAPATHIKARAM WITH INDIAN SOCIETY IN MALAYSIA

**கு.குணசேகரன் *[1] / K.Gunasekaran *[1]**

**சற்குணவதி [2] / M.Sargunavathy [2]**

[1] Faculty of Communication and Language, Sultan Idris Education University, Malaysia.
Email : kmguna_0203@yahoo.com

[2] Department of Tamil, Institute of Distance Education, University of Madras, India.
Email : gunavathym@gmail.com

*Corensponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/90

**Abstract**

The purpose of this study is to study the worship of the gods, the ways of worship of the god, the belief in the god, the response to the deity and religion practiced by the community in the epic of Silapathikaram. In addition, this study also examines the understanding of the Indian community in Malaysia towards god as the society in the Silapathikaram epic. Researcher using qualitative methods to describe the textual content. Researchers have conducted field studies to collect data from the Indian community in Malaysia. It is through this study that the Tamil community in ancient times worshiped various Gods. In addition, they also follow various ways of worshiping the god, having high faith in the god and receiving various praises to God. They also follow various religions that are guided by God. Indians in Malaysia still trust God in their daily lives. Through this study, the people of today are believed to be able to recognize Tamil life in ancient times while respecting God, ways of worship, beliefs, worship and religion.

**Keywords:** Silapathikaram, worship, god, beliefs, religion

**ஆய்வுச் சாரம்**

இந்த ஆய்வின் வழி சிலப்பதிகாரக் காப்பியத்தில் மக்கள் வழிபட்ட தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், விழாக்கள், சமயங்கள் போன்ற கூறுகளை ஆராய்வதாகும். காப்பியத்தில் உள்ள இனக்குழு எவ்வகையான தெய்வ சிந்தனைக் கொண்டவர்கள் என்று தெள்ளத் தெளிவாக ஆராய்வதாகும். சிலப்பதிகார மக்கள் கொண்ட தெய்வ சிந்தனை எவ்வகையாக மலேசியா இந்திய சமூகத்தினருடன் அமையப்பெற்றிருக்கின்றது என்பதனையும் ஆராய்வதாகும். இந்த ஆய்வு சிலப்பதிகாரக் காப்பியம் இலக்கிய வடிவைப் பெற்றதால் ஆய்வாளர் பண்புசார் அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளார். பண்புசார் அணுகுமுறை மூலம் ஆய்வாளர் சிலப்பதிகாரக் காப்பியத்தில் காணப்படும் மானிடவியல் விவரங்களை ஆய்வு செய்ய ஏதுவாக அமைந்துள்ளது. மேலும், மலேசியா இந்து சமூகத்தினரிடம் தரவுகளைத் திரட்ட கள ஆய்வினையும் மேற்கொண்டுள்ளார். இந்த ஆய்வின் மூலம் ஆய்வாளர் சிலப்பதிகார மக்கள் பல வகையான தெய்வங்களை வழிபாடு செய்தவர்கள் என அறிந்துள்ளார். சிலப்பதிகார மக்கள் பல வழிபாட்டு முறைகளையும், தெய்வத்தின் பால் அதீக நம்பிக்கை கொண்டவர்கள் என நியாயப்படுத்துகின்றார். இதனைத் தவிர சிலப்பதிகார மக்கள் தெய்வங்களுக்கென பல விழாக்களைக் கொண்டாடியும் பல சமயங்களைச் சார்ந்தும் ஒரு மதிப்புமிக்க வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். ஆய்வின் முடிவாகச் சிலப்பதிகார மக்கள் தங்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறையில் தெய்வ சிந்தனை மிக்கவர்களாக இருகக்கின்றனர். இந்த ஆய்வின் மூலம் தற்கால மக்கள் இன்னும் நம் பழைய தமிழ்ச் சமூகத்தின் தொன்மையினை அறிவது மட்டுமின்றி தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கை, விழாக்கள், சமயத்தை மதிப்பவர்களாக வாழ்வார்கள் என்பது உறுதியான ஒன்று.

**கருச்சொற்கள்**: சிலப்பதிகாரம், வழிபாடு, தெய்வம், நம்பிக்கை, சமயம்

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 6th May 2020, revised 30th May 2020, accepted 5th June 2020

## அறிமுகம்

ஐப்பெருங்காப்பியங்களில் முதன்மைக் காப்பியமாகச் சிலப்பதிகாரம் விளங்குகின்றது. இயல், இசை, நாடகம் ஆகிய முப்பொருளுக்கு முக்கியம் கொடுத்திருந்தாலும் தெய்வ தொடர்புடைய விவரங்கள் அதிக அளவில் தன்னுள் அடக்கியுள்ளது. சிலப்பதிகார மக்கள் மூன்று காண்டங்களிலும் தெய்வ சிந்தனை உடையவர்களாகவே காப்பியத்தில் காண்பிக்கப்படுகின்றனர். கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் இளங்கோவடிகளால் எழுதப்பட்ட சிலப்பதிகாரக் காப்பியத்தில் தெய்வ தொடர்புடைய விவரங்கள் பின்னாளில் அனைத்துத் தமிழ் மக்கள் வாழ்ந்த நாடுகளிலும் ஒன்றிணைந்து இருப்பதனைக் காணலாம். அவ்வகையில் மலேசியா நாட்டில் இந்து சமயத்தினர் சிலப்பதிகார மக்களைப் போன்று வழிபாடு செய்த தெய்வங்களையும்; வழிபாட்டு முறைமைகளையும் கொண்டுள்ளனர் எனலாம். மேலும், தெய்வங்களின் மீது கொண்டுள்ள நம்பிக்கை, சமயங்கள், விழாக்களும் மலேசியா மக்கள் சிலப்பதிகார மக்களைத் தழுவி

உள்ளனர். இனவரைவியலாளர் பக்தவத்சல பாரதி குறிப்பிட்டுள்ளபடி ஓர் இனக்குழுவை 53 கூறுகளைக் கொண்டு ஆராய முடியும். அவர் குறிப்பிட்டு இருந்த 53 கூறுகளில் மக்கள் வழிபட்ட தெய்வ வகைகள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், சமயங்கள், விழாக்கள் ஆகியவைகள் தெய்வத் தொடர்புடையவை ஆகும் (பக்தவத்சல பாரதி, 2011)[1]. இந்த ஆய்வின் மூலம் சிலப்பதிகார மக்களைப் போன்று எவ்வகையில் மலேசியா இந்தியச் சமூகத்தினர் தெய்வ சிந்தனைமிக்கவர்களாக இருக்கின்றனர் என்பதனை ஆராய்வதாகும்.

## ஆய்வின் சிக்கல்

சிலப்பதிகாரம் ஒரு சிறப்பை மட்டும் தழுவி நில்லாமல் பல சிறப்புகளையும் மனித வாழ்வியல் கூறுகளை மிக ஆழமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. மனிதன் வாழ்வியல் சூழல் அவர்கள் கொண்டுள்ள சமயம், நம்பிக்கை, வழிபாடு இன்னும் விழாக்கள் எனக் குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு கால சூழலில் உருவெடுக்கின்றது (வேங்கடவன், 1998)[2].

சிலப்பதிகார மக்கள் இயற்கையைப் போற்றுபவர்களாக இருக்கின்றனர். இயற்கை மதித்து வணங்கியும் வாழ்கின்றனர். நீர், நிலம், காற்று, ஆகயம், மண் ஆகியவைகளை போற்றி மதித்தும் வாழ்ந்துள்ளனர். இந்நிலை இன்று வாழும் மக்களிடையே சற்றுக் குறைந்து காணப்படுகின்றது. இயற்கையை மதிக்காமல் மனிதர்கள் வாழ்வதனால் இயற்கை சீற்றத்திற்கு ஆளாகி நோய், போரிடர் போன்ற இன்னல்களுக்கு ஆளாகின்றான் (Kebakaran hutan hujan Amazon beri kesan buruk, 2019)[3].

சிலப்பதிகார மக்கள் பல தெய்வக் கொள்கையைக் கொண்டவர்கள். இயற்கை தெய்வங்களை வணங்குவது போன்று பெருந்தெய்வம் மற்றும் சிறுந்தெய்வங்களையும் வணங்குகின்றனர். சிலப்பதிகார மக்கள் பல தெய்வங்களை வழிபாடு செய்தாலும் அவர்கள் அந்தத் தெய்வங்களுக்குக் கலங்கம் விளைவிக்கும் எந்தவொரு நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை. மந்திரம், படையல், யாகம், பிராத்தனை போன்ற தெய்வத்திற்குத் தேவையான காரியங்களை நிகழ்த்துகின்றனர். இந்நிலை தற்கால மக்களிடையே சற்று மாறுபாடு கண்டுள்ளது எனலாம். கோவில்களுக்கு முறையான உடை அணியாமலும், கோவிலில் மது அருந்துதல், சண்டை போடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுப்படுகின்றனர் (Aruna, 2013)[4].

இதனைத் தொடர்ந்து, சிலப்பதிகார காப்பியத்தில் பல சமயங்கள் கொண்ட காப்பியமாகக் கருதப்படுகின்றது. மக்கள் தங்களின் சமய நெறிகளைப் பின்பற்றி வாழ்கின்றனர்; தவிர பிற மதங்களைத் தூற்றிப் பேசியதில்லை. இந்தச் சூழல் சற்று மாறி மக்கள் பிற மதங்களை கேலிச் செய்தும்; பிற மதத்தினரிடம் சண்டை போடுகின்றனர் (Laporan penuh tentang rusuhan Kuil Sri Maha Mariamman Seafield, 2018)[5].

சிலப்பதிகார மக்களுக்கு எப்படிப்பட்ட துன்பம் ஏற்பட்டாலும் அவர்கள் அதிகமாகத் தெய்வங்களையே நம்பி இருந்தனர். தற்கால மக்கள் தங்களுக்கு ஏதாவது துன்பங்கள் ஏற்படும் பொழுது தெய்வங்களைக் குறைந்த அளவில் நாடியும்; அதிக அளவில் போலி சாமியார்களை நம்பி இருக்கின்றனர். ஆகவே, இந்த ஆய்வு சிலப்பதிகார மக்கள் வழிபட்ட தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், சமயங்கள், விழாக்கள் போன்ற விவரங்களையும் ஆராய்வது மட்டுமின்றி மலேசியா மக்களிடம் எவ்வகையில் பொருந்தி வந்துள்ளது என்பதனையும் எடுத்துக் கூறுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

இந்த ஆய்வு சிலப்பதிகாரத்தில் காணப்பெறும் தெய்வ தொடர்புடைய விவரங்களான தெய்வ வகைகள், வழிபாட்டு முறை, நம்பிக்கை, சமயம், விழாக்கள் கண்டறிவது மட்டுமின்றி எவ்வகையில் மலேசியா மக்களிடையே ஒன்றினைந்து உள்ளது என்பதனையும் ஆராய்வதாகும். சிலப்பதிகாரக் காப்பியத்தில் கண்டறிப்பட்ட தெய்வ தொடர்புடைய விவரங்கள் பக்தி உலகுக்கு ஒரு வித்தாக அமையும்.

**ஆய்வு வடிவமைப்பு**

இந்த ஆய்வினை மேற்கொள்ள ஆய்வாளர் முழுமையாகப் பண்புசார் அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளார். பண்புசார் ஆய்வின் வழி ஆய்வாளர் ஆவணங்களைப் பகுப்பாய்வு செய்தல் மூலம் ஆய்வை மேற்கொண்டுள்ளார். ஆய்வாளர் தரவுகளைச் சேகரிக்க நூல்களைப் பயன்படுத்தியுள்ளதனால் நூலாய்வு முறையையும் கையாண்டுயுள்ளார். இவ்வழிமுறையின் மூலம், ஆய்வாளர் ஆய்வு தொடர்பான பல நூல்கள், ஆய்வடங்கள், ஆய்வேடுகள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியவைகளை வாசித்துத் தரவுகளைச் சேகரிக்க துணையாக அமைந்துள்ளது. மேலும், இணைய வசதியைப் பயனடுத்தித் தரவுகள் திரட்டவும் இம்முறை துணைப்புரிந்துள்ளது.

**தரவு சேகரிக்கும் முறை**

தரவு சேகரிக்கும் முறை ஆய்வு தொடர்பான தரவுகளைத் திரட்டுவதற்காக அதனை ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான தரவுகள் அனைத்தும் சிலப்பதிகாரக் காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளரால் திரட்டப்பட்டுள்ளது. மேலும், ஆய்வு நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றவைகளின் வழி ஆய்விற்கான தரவுகள் கூடுதலாகச் சேகரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆய்வாளர் கள ஆய்வின் மூலம் தகவல்களைச் சேகரித்துள்ளார். மலேசியாவில் சில கோயில்களுக்குச் சென்றும், வீடுகளின் வழிபாட்டு முறையினை நேரில் கண்டும் தரவுகளைச் சேகரித்துக் குறித்துள்ளார். அவ்வகையில் சேகரிக்கப்படும் தரவுகள் அனைத்தும் பகுப்பாய்வு முறையிலும் விளக்கமுறையிலும் அணுகப்பட்டுள்ளது.

**தெய்வங்கள்**

சிலப்பதிகார மக்கள் பல தெய்வ வழிபாட்டுக் கொள்கையைப் பின்பற்றியுள்ளனர். அவர்கள் இயற்கை தெய்வம், பெருந்தெய்வம், சிறுதெய்வம், மனிதனாக வாழ்ந்து பின் தெய்வமாக மாறிய பத்தினித் தெய்வமாகக் கண்ணகியையும் வழிபாடு செய்துள்ளனர்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் திங்கள், சூரியன் ஆகியவைகளை இயற்கை தெய்வமாகக் கருதுகின்றனர். சூரியன் மற்றும் சந்திரன் ஆகியோர்களுக்குச் சிலப்பதிகாரக் காப்பியத்தில் தனிக் கோயிலும் உண்டு. மலேசியா நாட்டில் சந்திரனை இந்தியச் சமூகத்தினர் கோயில் அமைத்து வழிபாடு செய்யாவிட்டாலும் முழு சந்திரன் வானில் தோன்றும் சித்திரை மாத பௌர்ணமி நாளில் முருகப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நடத்தப்படுகின்றது. மேலும்,

மலேசிய இந்தியர்கள் அமாவாசை நாளில் அதாவது புது நிலவு அன்று தனது முன்னோர்களுக்குத் தர்ப்பணம் கொடுப்பார்கள். மலேசியாவில் சந்திரன் தெய்வத்திற்குத் தனியாகக் கோயிலும் உண்டு. இந்தக் கோயிலைச் சீனர்கள் நிறுவி வழிபடுகின்றனர். மலேசிய இந்துக்கள் நவக்கிரகத்தில் சந்திரனை இணைத்துத்தான் வழிபடுகின்றனர். மேலும், சீனர்கள் சந்திரன் முழு பௌர்ணமியின் போது சந்திரன் விழா (Moon Festival) என்று கொண்டாடுகின்றனர். மலேசியாவில் வாழும் மலாய் இனத்தினர் தங்களில் பெருநாளைக் கொண்டாட ரமடான் மாத கடைசியில் வானில் பிறை சந்திரனைக் கண்டப் பிறகு அவ்விழாவைக் கொண்டாடுவார்கள்.

மலேசியா இந்திய சமூகத்தினர் சூரியனுக்குத் தனிக் கோயில் அமைக்கவில்லை. இருப்பினும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஆண்டுதோறும் தை மாதத்தில் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர். மலாய்க்காரர்கள், சீனர்கள் இணைந்தும் ஒற்றுமையாக இந்தப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர் (Council's Ponggal fest celebrates diversity, 2019)[6]. மலேசியாவில் சூரியன் தெய்வத்திற்குத் தனியாகக் கோயிலும் உண்டு. இந்தக் கோயிலைச் சீனர்கள் நிறுவி வழிபடுகின்றனர். மலேசிய இந்துக்கள் நவகிரத்தில் சூரியனை இணைத்துத்தான் வழிபடுகின்றனர்.

சிலப்பதிகார மக்கள் மழை வழங்கும் நீர் வளங்களைத் தெய்வமாக வழிபட்டுள்ளனர். மழை ஒரு நாட்டின் வளத்தை மேம்படுத்துகின்றது. மழை உருவாக்கத்திற்குத் பெருந்துணையாக இருப்பவை நீர் வளங்கள் ஆகும். கடல், ஆறு போன்ற நீர்வளங்களைச் சிலப்பதிகார மக்கள் மதித்து வழிபட்டனர். மலேசியா நாட்டில் ஆண்டுதோறும் பினாங்கு மாநிலத்தில் தெப்பத் திருவிழா நடைபெறும். இந்த விழாவில் கடலில் படகு மூலம் சென்று கடல் நீருக்கு வழிபாடு செய்து நன்றி தெரிவிக்கப்படுகின்றது. மேலும், மலேசியாவில் நீர் தெய்வத்திற்குத் தனியாகக் கோயிலும் உண்டு. இந்தக் கோயிலைச் சீனர்கள் நிறுவி வழிபடுகின்றனர்.

புகார்க் காண்டத்தில் வாழும் மக்கள் மரங்களையும் தங்களது தெய்வமாகக் கருதி அதற்குக் கோயில் அமைத்து வழிபாடு செய்துள்ளனர். அமரர் தருகோட்டம் என்று குறிப்பிடப்படுவது கற்பக மரத்தை ஆகும். அவ்வகையில் கற்பகம் என்ற மரத்தைச் சிலப்பதிகார மக்கள் வழிபாடு செய்துள்ளனர். மலேசியா நாட்டில் மக்கள் சில வகை தாவரங்களைத் தெய்வமாக வணங்கி வருகின்றனர். அந்த மரங்களைத் தனியாகவும் தெய்வங்களை மரத்தின் கீழே அமைத்தும் வழிபடுகின்றனர். தெய்வங்களை வழிபடும் பொழுது மரங்களையும் இணைத்து வழிபடுகின்றனர். அவ்வகையில் கோயில்களில் வேப்பிலை மரம், பூ மரம், அரச மரம் மற்றும் ஆல மரம் கீழே கணபதி தெய்வத்தையும் வைத்து வழிபடுகின்றனர். சில சிவன் ஆலயங்களின் வில்வ மரத்தையும் பெருமாள் கோயில்களில் துளசி செடிகளையும் வளர்த்து வருகின்றனர். சில தெய்வங்களை மரங்களில் பெயரை இணைத்தே அழைக்கின்றனர்.

சிலப்பதிகார மக்கள் விலங்குகளையும் கோயிலாக அமைத்துத் தங்களின் தெய்வமாக எண்ணி வழிபாடு செய்துள்ளனர். போருக்குச் சென்று வெற்றியினைத் தேடித்தரும் யானைகளையும் தெய்வமாகப் போற்றுகின்றனர். தங்கள் துன்பங்களைத் தெய்வமாக நிற்கும் வெற்றிக் கொண்ட யானையிடம் கூறுகின்றனர். மலேசியா இந்திய மக்கள் சில விலங்குகளைத் தெய்வமாக வணங்கி வருகின்றனர். மதுரை வீரன் பக்கத்தில் அமைந்திருக்கும் நாய், குதிரை சிலைகளையும் மதுரை வீரனை வணங்கும் பொழுது வணங்குகின்றனர். மேலும், சில அம்மன் கோயில்களில் நாக பாம்பு புற்றுகளில் பால், முட்டை வைத்தும் வழிபடுகின்றனர். இதனைத்

தொடர்ந்து பொங்கலுக்கு அடுத்த நாள் கொண்டாடப்படும் மாட்டுப் பொங்கல் அன்று மாடு வளர்ப்பவர்கள் மாடுகளைத் தெய்வமாகக் கருதியும் வழிபடுகின்றனர் (Alagesh, 2017)[7].

சிலப்பதிகாரக் காப்பியத்தில் மக்கள் வழிபாடு செய்த சிவன் கோயில்கள், சிவனின் சின்னங்கள், சிவனின் தோற்றம், சிவன் ஆடிய நடனம், சிவனின் திருப்பெயற்கள் போன்ற விவரங்களைக் காணலாம். சிவன் சிலப்பதிகாரத்தில் நிறையப் பெயர்களில் அழைக்கப்படுகின்றார். சிலப்பதிகாரத்தில்,

“தீதுதீர் மதுரையும் தென்னவன் கொற்றமும்”

(சில: மது: அடை - 9) [8]

என்ற வரிகளில் மூலம் சிவன் வழிபாட்டினை அறிய முடிகின்றது, சிவன் அடியார்களும் சிவப்பெருமானை முழுமுதற் தெய்வமாகக் கருதி வழிபடுகின்றனர். சிலப்பதிகாரக் காப்பியத்தைப் போன்று மலேசியா நாட்டில் சிவன் தனிக் கோயில் கொண்டு மலேசியா சமூகத்தினர் வழிபடுகின்றனர். தேவாரம், திருவாசகம் மற்றும் தமிழில் மந்திரங்கள் உச்சரித்தும் இந்தக் கோயில்களில் வழிபாடு செய்யப்படுகின்றது.

மும்மூர்த்தியின் ஒருவராக விளங்கும் திருமாலைச் சிலப்பதிகார மக்கள் தங்களின் தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்துள்ளனர். சிலப்பதிகார மக்கள் திருமாலுக்குக் கோயில் அமைத்து வழிபாடு செய்துள்ளனர். புகார்க் காண்டத்தில் திருமால் கோயிலை அவர் கொண்டிருக்கும் நீல உடலைக் குறிக்கும் வழிபாட்டுத் தளமாக அமைத்து வழிபாடு செய்துள்ளனர். சிலப்பதிகாரக் காப்பியத்தைப் போன்று மலேசியா நாட்டில் திருமால் தனிக் கோயில் கொண்டு பல பெயர்களில் மலேசியா சமூகத்தினர் வழிபடுகின்றனர்.

இளங்கோவடிகள் முருகனின் அவதாரம், தோற்றம், எழில், ஊர்தி, கொடி, மலை, அணிகள் முதலியவற்றையும் அழகாகச் சுட்டியுள்ளார். இக்கூறுகள் அனைத்தும், முருகனிடத்தில் சிலப்பதிகார மக்கள் கொண்டிருந்த பக்தி சிறப்பினை உணர்ந்து கொள்ள வழிவகுக்கின்றது. தமிழ்த் தெய்வம் என்று அழைக்கப்படும் முருகப் பெருமானுக்கு மலேசியா சமுகத்தினர் தனிக் கோயில்களை அமைத்து வழிபடுகின்றனர். முருகப் பெருமான் சில கோயில்களில் மலைக்கு மேல் அமர்ந்து மக்களுக்கு அருள்பாளிக்கின்றார். முருகப் பெருமானுக்குத் தைப்பூசத் திருநாள் அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இந்தியர்கள் மட்டுமின்றி சீனர்கள், ஆங்கிலேயர்கள் காவடி மற்றும் பால்குடம் ஏந்தி தங்களின் நேர்த்திக் கடனைச் செலுத்துகின்றனர்.

சிலப்பதிகாரக் காலத்தில் கொற்றவை வழிபாடு தமிழகத்தில் எங்கும் பரவி இருந்தது. கொற்றவை பற்றி அதிகளவில் வேட்டுவவரியில் இளங்கோவடிகள் குறித்துள்ளார். மலேசியா நாட்டில் கொற்றவை எனும் பெயரைக் கொண்டு இந்தத் தெய்வத்தை மலேசியா மக்கள் வழிபடவில்லை. கொற்றவையைக் காளி என்ற பெயரைக் கொண்டு வழிபடுகின்றனர். சிங்க முக காளியம்மன், அகோரக் காளியம்மன், பத்ரக் காளியம்மன் என்ற பெயரில் கொற்றவையைக் காளியாக வழிபடுகின்றனர். சிலப்பதிகாரக் காப்பியத்தில் கொற்றவை தெய்வ உருவத்தைச் சித்தரித்தது போன்று மலேசியாவிலும் இந்தத் தெய்வத்தை அதே தோற்றத்தில் அமைத்து வழிபடுகின்றனர். ஆண்டுதோறும் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றது.

புகார்க் காண்டத்தில் சாதவாகனன் என்ற ஐயனாரின் கோயிலும் அமைந்துள்ளது. இந்தக் கோயில் புறம்பு அணைந்த இடம் என்பதனால் புறம்பணயாயிற்று என்று சிலப்பதிகாரம் சுட்டுகின்றது. மலேசியா நாட்டில் ஐய்யனாரை மக்கள் தெய்வமாக வழிபடுகின்றனர்.

மதுரை நகரில் பல தெய்வ வழிபாடுகள் இருப்பது போன்று காவல் தெய்வம் கோயில் கொண்டுள்ளதனையும் சிலப்பதிகாரம் சுட்டுகின்றது. மதுரையைத் தீக்கடவுள் சுட்டெரிக்கத் தொடங்கியப் போது மதுரை நகரைக் காத்து வந்த காவல் தெய்வமும் தன் கோயிற்கதவினை அடைத்தபடி உள்ளேயே இருந்துவிட்டது. சிலப்பதிகார மக்கள் தங்களைக் காவல் காக்க காவல் தெய்வத்தையும் வழிபாடு செய்திருப்பதனை அறிய இயலுகின்றது. மலேசியாவில் பெரும்பாலன காவல் தெய்வங்கள் தோட்டப்புறங்களில் அதிகமாக மக்களால் வழிபாடு செய்யப்பட்டுள்ளது. மலேசியா நாட்டில் அமைந்துள்ள வெவ்வேறான தோட்டத்தில் வெவ்வேறான காவல் தெய்வங்களை மக்கள் வழிபடுகின்றனர். முனீஸ்வரர், முனியாண்டி, சங்கிலி கருப்பர், காளி போன்ற தெய்வங்களை மலேசியா மக்கள் வழிபடுகின்றனர். ஆண்டுதோறும் இந்தத் தெய்வங்களைச் சாந்தி செய்யும் நோக்கில் ஆடு, கோழி பலிக்கொடுக்கின்றனர் (மணிமாறன், 2013)[9].

சிலப்பதிகாரத்தில் பத்தினித் தெய்வ வழிபாட்டிற்கு உயிருட்டுவதற்காக அதற்கு முக்கியதுவம் கொடுத்துப் பேசியுள்ளது. சிலப்பதிகாரம் கண்ணகியை மானிடப் பெண்ணாகப் படைத்துப் பின்பு தெய்வமாக்கியது. சிலப்பதிகாரத்தில் தன் காலத்தில் இருந்து பல்வேறு சமயங்களைப் பற்றிக் குறித்திருந்தப் போதிலும், பத்தினி வழிபாடு என்னும் புதிய ஒன்றை முதன்முதலாக அறிமுகப்படுத்தியுள்ளது. கண்ணகி பத்தினித் தெய்வமாகத் தோன்றுவதற்கு முன்பாகவே தன் வாழும் காலத்தில் தன் கற்பு நெறியைப் பின்பற்றியதனால் பத்தினித் தெய்வமாகவே போற்றப்படுகின்றாள். கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாகக் கொடுக்கும் பொழுது கற்புக் கடமையை மேற்கொண்ட தெய்வம் கண்ணகி என்று குறிப்பிட்டுக் கூறுகின்றார். சிலப்பதிகாரக் காப்பியத்தைக் கண்ணகி சிறப்புச் செய்தது மட்டுமல்லாமல் கண்ணகி தெய்வமான சூழல் மலேசியா நாட்டிலும் சக்தி வழிபாட்டிற்குப் பெரும் பங்காற்றியது எனலாம். சிலப்பதிகாரத்தில் மக்கள் கண்ணகி தெய்வத்திடம் மழை வரம் தருமாறும் அம்மை நோயைப் போக்குமாறு வேண்டினர். கண்ணகி மலேசியா நாட்டில் மாரியம்மன், கருமாரியம்மன், முத்து மாரியம்மன் போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டுத் தோட்டப்புற மலேசியா மக்களால் பெருமளவில் வழிபடப்படுகின்றாள். சிலப்பதிகாரக் காப்பியத்தில் ஆடி மாதத்தில் கண்ணகி தெய்வத்தை வழிபாடு செய்தது போன்று இன்றளவும் ஆடி மாதங்களில் அம்மன் கோயில்களில் சிறப்புப் பூஜைகள் நிகழ்த்தப்படுகின்றன.

புத்தர் பள்ளிகள் சிலப்பதிகாரக் காலத்தில் இருந்து வந்ததையும், மக்கள் பௌத்த சிந்தனை மிக்கவர்களாக இருப்பதையும் அறியலாம். புத்த மதம் இந்தியாவில் தோன்றிய பின் பிற நாடுகளுக்குப் பரவத் தொடங்கியது. மலேசியா நாட்டில் புத்த மதத்தினைச் சீனர்கள் பின்பற்றுகின்றனர். புத்த விகாரங்கள் கொண்டு சீனர்கள் வழிபடுகின்றனர். மேலும், புத்தர் பிறந்த நாளையும் கொண்டாடுகின்றனர். புத்த மதம் சிலப்பதிகாரக் காப்பியத்தில் காண்பிக்கப்பட்டாலும் மலேசியா நாட்டில் இதன் தாக்கம் நின்று விடவில்லை.

மதுரைக் காண்டத்தில் கோயில்கள் கொண்டு தெய்வங்களை வழிபாடு செய்தது போன்று முனிவர்கள் வாழ்ந்து அதே இடத்தில் சமாதி கொண்ட இருப்பிடத்தை அறவோர் பள்ளியென சிலப்பதிகாரம் குறிக்கின்றது. அறத்தையும் துறவறத்தையும் ஆகிய இரண்டையும் சிறப்புற விளங்க செய்த முனிவர்களுக்கென்று இந்தப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மலேசியா நாட்டில் குறிப்பிட்ட சில மகான்கள் வாழ்ந்து ஜீவ சமாதி அடைந்த இடங்களை மக்கள் வழிபாடு செய்கின்றனர். அவர்கள் வாழ்ந்த இறந்த அவ்விடத்தைக் கோயிலாக உருவாக்கி தெய்வமாக வணங்குகின்றனர். சீரடி சாய் பாபா, சத்யா சாய் பாபா போன்ற குருமார்களையும் வழிபடுகின்றனர்.

**வழிபாட்டு முறை**

சிலப்பதிகார மக்கள் தங்களின் விருப்பமான தெய்வங்களுக்குப் படையல் வைத்து வழிபாடு செய்துள்ளனர். காவற்பூதத்துக் கோயிலின் வாசலில் முன் அமைந்துள்ள பலிபீடிகையில் புழுக்கல், எள்ளுருண்டை, நிணச்சோறு, பூ, நறுபுகை, பொங்கல் ஆகியவற்றைப் படைத்து மறக்குடி மகளிர் ஒன்றிணைந்து வழிபடுகின்றனர். மலேசியா நாட்டில் கோயில்களுக்குச் செல்லும் பக்தர்கள் பூமாலை, பழங்கள், வழிபாட்டுப் பொருட்கள் கொண்டு சென்று தெய்வங்களை வழிபடுகின்றனர். சிலர் தங்களின் நேர்த்திக்கடனை முடிப்பதற்காகப் பால் குடம் ஏந்தி தெய்வங்களை வணங்குகின்றனர் (Christina Low, 2019)[10].

சிலப்பதிகாரத்தில், மருவூர்ப் பக்கத்தின் சுற்றுப்புறங்களிலே வாழும் வீரச்செறிவுடைய மறவர்களும், பட்டினப்பாக்கத்தின் பக்கங்களிலே படைக்கலங்கொண்டு போரிடும் வீரர்களும் பெரிய பலிபீடிகைக்கு முன் சென்று, தம் மன்னனின் இடையூர்களை அழித்தும் அவரைப் போரில் வெற்றி அடைய செய்யுமாறும் பூதத்திடம் வேண்டி நின்றனர். அந்தப் பூதத்திடம் வேண்டியவாறு வெற்றிக் கிடைத்தால் தங்களின் கருமையான தலைகளைப் பலிக் கொடுப்போம் என்று வேண்டுகின்றனர். மலேசியா நாட்டில் தெய்வங்களுக்குப் பலி கொடுக்கும் வழக்கம் உள்ளது. ஆடு, கோழி குறிப்பாகச் சிறுந்தெய்வங்களுக்குப் பலி கொடுப்பது வழக்கம். மேலும், மாமிசம் சாப்பிடாத தெய்வங்களுக்குத் தாவரப் பலியும் கொடுக்கப்படுகின்றது. எலுமிச்சை, பூசணிக்காய் போன்ற தாவரங்களைத் தெய்வங்களுக்குப் பலியிடும் வழக்கம் மலேசியாவில் காணப்படுகின்றது.

இந்துக்களின் வழிபாட்டு முறைகளில் முதன்மையாக வருவது மந்திரத்தை உச்சரித்து வழிபடும் வழிபாடகும். அவ்வகையில், சிலப்பதிகாரத்து மக்கள் மந்திரத்தை உச்சரித்து வழிபாடு செய்ததைக் காணலாம். அவர்கள், சிவ பெருமானுக்கு உரிய “சிவாயநம” என்ற மந்திரத்தையும், பெருமானுக்கு உரிய “நாராயணா”, என்ற மந்திரத்தையும் கூறி வழிபட்டதை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் படைத்துக்காட்டியுள்ளார். பெருமாள் மந்திரம் சிலப்பதிகாரத்தில்,

“...‘நாராயணா! என்னா நாவென்ன நாவே?”

(சில: மது: ஆய் - 37) [11]

சிவனின் ஐந்தெழுத்து மந்திரமான நமசிவாய அல்லது சிவாயநம என்ற மந்திரத்தை உச்சரித்தால் வேண்டியது வெற்றியடையும் கொற்றவையின் மறைமொழியாகிய மந்திரமும் சிலப்பதிகாரத்தில் சுட்டப்பெற்றுள்ளதையும் அறிய இயலுகிறது. மலேசியா நாட்டில் கோயில்களில் தெய்வங்களுக்கு மந்திரங்களை உச்சரித்து வழிபடும் முறை உள்ளது. சில கோயில்களில் மந்திரங்களைத் தமிழில் உச்சரிக்கப்படுகின்றது. மந்திரங்களைப் பெரும்பாலும் பெருந்தெய்வங்களுக்கு அதிக அளவில் உச்சரிக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகின்றது. சிலர் வீடுகளில் தெய்வங்களை வழிபடும் பொழுதும் மந்திரங்களை உச்சரித்து இல்ல தெய்வங்களை வணங்கின்றனர்.

சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் தியானம் செய்யும் பழக்கம் உடையவர். கோவலன் கண்ணகி இருவரும் கவுந்தியடிகள் தியான நிலையில் இருக்கும் பொழுது அவரை வணங்கி நின்றனர். துறவரம் வாழ்க்கையை மேற்கொள்ளும் கவுந்தியடிகள் தெய்வத்தை நினைத்து தியானம் இருந்து வழிபடுகின்றனர். மலேசியா நாட்டில் தியானம் செய்யும் முறையினையையும் குருமார்களின் துணையுடன் பின்பற்றுகின்றனர். சிலர் தனியாக ஆசிரமம் அமைத்துத் தியானம் செய்யக் கற்றுக் கொடுகின்றனர்.

சிலப்பதிகார மக்கள் பிறருக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டால் உடனடியாக அது தெய்வத்தின் செயல் என்று கருதி தங்களின் தெய்வத்திற்குக் கூட்டாக இணைந்து பிரத்தனைகளை மேற்கொள்வார்கள். இந்தக் கூட்டுப் பிராத்தனை அவர்கள் ஒன்றாக ஆடிப் பாடி மகிழ்ந்து தெய்வத்திடம் வேண்டி நிற்பார்கள். ஆயர் சேரியிலே பல தீய நிமித்தங்கள் தோன்றும் பொழுது; அதனால் தீமை நேரும் என்று அஞ்சிய ஆய மகளிர்கள்; தம் குலதெய்வமான கண்ணனை வேண்டிப் பிராத்தனை செய்கின்றனர். மலேசியா நாட்டில் கூட்டுப் பிராத்தனை மேற்கொள்ளும் வழக்கம் கொண்டவர்கள். கூட்டுப் பிராத்தனையை வீடுகளிலும் கோயில்களிலூம் செய்வது சில இடங்களில் வழக்கமாகக் கொண்டுள்ளனர். மேலும், பிறருக்கு ஏற்படும் துயரங்கள் நீங்க ஒன்றாக இணைந்து கூட்டுப் பிராத்தனை மேற்கொள்வார்கள் (Audrey Dermawan, 2017)[12].

சிலப்பதிகாரக் காப்பியத்தில் மதுரைக் காண்டத்தில் மக்கள் தினந்தோறும் தங்களின் வேலையாகத் தெய்வங்களுக்குத் துதிப்பாடல் பாடுவது வழக்கம். கோவலன் கொலை செய்யப்பட்டது தொடர்ந்து தீத் தெய்வத்தைக் கண்ணகி மதுரைமீது ஏவினாள். அப்பொழுது அந்தி வேளையிலே தெய்வங்களைப் போற்றி துதிப்பாடுதல் அனைத்தும் நிறுத்தப்படுகின்றது. இதன் மூலம் சிலப்பதிகார மக்கள் தினந்தோறும் தெய்வங்களுக்குத் துதிப்பாடுகின்றனர். மலேசிய நாட்டில் கோயில்களில் தெய்வங்களுக்காகத் துதிப்பாடல் பாடப்படுகின்றது. தேவாரம், திருவாசகம், திருமுறை தெய்வங்களுக்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றது. மேலும், சில இயக்கங்கள் சமய வகுப்புகளை நடத்தி தெய்வ துதிப்பாடல்களைக் கற்றுக் கொடுக்கின்றனர்.

மதுரைக் காண்டத்தில் பல தெய்வங்களின் கோயில்கள் அமைந்திருப்பது போன்று அங்கு வாழும் மக்கள் தினந்தோறும் தெய்வங்களுக்கு வேதங்களையும் திருநாமங்களையும் ஓதி வழிபடுவது வழக்கம். மதுரையில் அந்தணர்கள் வேதங்களையும், பெண்கள் திருநாமங்களை ஓதியும் தெய்வங்களை வழிபடுகின்றனர். மலேசியா நாட்டில் குறிப்பாகச் சிவன் நாமமான நமசிவாய மற்றும் பெருமாள் நாமமான நமோநாராயணா கோயில்களில் உச்சரிக்கப்படுகின்றது. மலேசியா இந்து சங்கமும் சைவச் சமயத்தின் தெய்வமான சிவனை வழிபடும் முறையினையையும் அதிகளவில் பரப்புகின்றது. மேலும், பெருமாள் வழிபாட்டினை மலேசியா ஹரே ராமா இயக்கமும் வழியுறுத்துக்கின்றது.

கண்ணகி தெய்வம் வடிவம் பெறும் பொழுது கண்ணகிக்கு என்று இமயத்தில் கல் கொணர்ந்து முறைப்படி கண்ணகிக்கு வேள்விகளை அமைக்க வேண்டும் என்று சேரன் செங்கூட்டுவன் தனது அமைசர்களுக்குத் தெரிவிக்கின்றார். வேள்வி செய்தல் முறையினை மலேசியா நாட்டில் யாகம் என்று பொருள்படுகின்றது. மலேசியா பெருந்தெய்வம் சிறு தெய்வக் கோயில்களில் யாகம் வளர்த்து வழிபாடு செய்யப்படுகின்றது. கோயில் திருவிழா, கும்பா அபிசேகம், சிறப்பு வழிபாட்டுப் பூஜைகள் போன்ற காலங்களில் இந்த யாகங்கள் தெய்வங்களுக்கு நிகழ்த்தப்படுகின்றது.

சிலப்பதிகார மக்கள் தங்களின் அன்றாட நாளில் தெய்வங்களை வணங்க வீடுகளில் விளக்கேற்றி வழிபாடு செய்துள்ளனர். வீடுகளில் தெய்வங்களை வணங்குவதற்கு முன்பாக அவர்கள் வீட்டில் உள்ள விளக்கை ஏற்றுகின்றனர். மதுரைக் காண்டத்தில் தீங்கு ஏற்படும் பொழுது அங்கு வாழும் மக்கள் வீடுகளில் விளக்கேற்றுவதனைத் தவிர்கின்றனர் என்ற வரிகளின் மூலம் அறியப்படுகின்றது. விளக்கேற்றும் வழக்கம் மலேசியா இந்து மக்களிடம் பெருமளமில் உள்ளது. வீடுகளில் காலை மாலை வேளைகளில் விளக்கேற்றித் தெய்வங்களை

வணங்குகின்றனர். மேலும், கோயில்களில் விளக்கேற்றும் முறையும் இருக்கின்றது. சில இடங்களில் திருவிளக்கு பூஜையும் நிகழ்த்தப்படுகின்றது.

**நம்பிக்கைகள்**

தெய்வங்களை அடைய மனிதர்களுக்கு மிகவும் முக்கியமாகக் கருதப்படுவது நம்பிக்கையாகும். சிலப்பதிகார மக்கள் தெய்வங்களின் மீது மிகவும் நம்பிக்கை கொண்டவர்களாகவே இருக்கின்றனர். தங்களின் அன்றாட வாழ்வின் நடவடிக்கையின் மூலம் தெய்வங்களின் கொண்டுள்ள நம்பிக்கை வெளிப்படுகின்றது. சாதாரண மக்கள் தெய்வ தோற்றம் பெற்று நடந்தவற்றையும், நடக்கப் போவதைப் பற்றியும் கூறுவது வெறியாடுதல் எனப்படுகின்றது. சிலப்பதிகார மக்கள் எதாவது தீங்கு வரும் பொழுது தெய்வங்களைத் தங்கள் உடம்பில் வரவழைத்து அத்தீங்குக்கான காரணங்களைத் தெரிந்து கொள்கின்றனர். மதுரைக் காண்டத்தில் அமைந்திருக்கும் கொற்றவை கோயிலில் கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் இளைப்பாறும் வேலையில் சாலினி என்ற பெண் தெய்வமேற்று கண்ணகி வாழ்வின் பின் நிகழ்வுகளைக் கூறுகின்றாள். சாலினி கொற்றவை தெய்வத்தின் அதீத நம்பிக்கை கொண்டுள்ளதனால் கொற்றவை தெய்வம் சாலினி மூலம் வந்து கோயிலுக்கு வருவோர்களுக்கு நடக்க போவதைப் பற்றி கூறுகின்றது. வெறியாடுதல் நிகழ்வு குறிப்பாகச் சிறுந்தெய்வங்களின் மூலம் மலேசியா நாட்டில் நிகழ்த்தப்படுகின்றது. மாரியம்மன், காளி, முனீஸ்வரர், மதுரை வீரன் போன்ற சிறுந்தெய்வங்கள் பிறர் உடம்பில் ஏறி மக்களுக்கு நிகழ்ந்த, நிகழ்கின்ற, நிகழப்போகும் சம்பவங்களை முன்கூட்டியே கூறுகின்றது. வெறியாடும் பொழுது அந்தத் தெய்வங்களுக்குப் பிடித்த பொருட்களான மாமிசம், மது, சுருட்டுப் போன்றவைகளும் படைக்கப்படுகின்றது.

வஞ்சிக் காண்டத்தில் செங்குட்டுவன் படைப்பெருக்கோடு, வடநாட்டினை நோக்கிச் செல்லும் முன் தெய்வத்திடம் வேண்டி நல்ல நேரம் பார்த்துப் போருக்குச் செல்கிறான். இயற்கையாகக் கருதப்படும் கோள்களைக் கொண்டு நல்ல நேரத்தை நிமித்திகன் என்பவன் மூலம் கணித்துக் கொடுப்பட்டப் பிறகு செங்குட்டுவன் போருக்குப் பயணம் செய்கின்றான். மலேசியா நாட்டில் இந்துக்களால் நடத்தப்படும் நிகழ்வுகள் நல்ல நேரம் பார்த்தே நடத்தப்படுகின்றது. கோயில் திருவிழா, பொங்கல், திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நல்ல நேரம் பார்த்தே நிகழ்த்தப்படுகின்றது.

சிலப்பதிகார மக்கள் தெய்வம் உண்டெனத் தெளிவுக் கொண்டும், அந்தத் தெய்வத்தின் அருளைப் பெற புலால் உணவைத் தவிர்த்தும், உயிர்க் கொலை செய்யாக்கூடாது என பெரும் நம்பிக்கை கொண்டுள்ளனர். மலேசிய இந்து மக்கள் குறிப்பாகச் சைவ மற்றும் வைணவ சமயத்தை முழுமையாகப் பின்பற்றுபவர்கள் முழுமையாகப் புலாலைத் தவிர்க்கின்றனர். சிலர் தெய்வ வழிபாடு ஒரு குறிப்பிட்ட காலங்களுக்குப் புலாலைத் தவிர்கின்றனர். திருவிழா, தைப்பூசம் போன்ற காலங்களில் குறிப்பிட்ட சில நாட்களுக்குப் புலாலைத் தவிர்த்துத் தெய்வங்களை வணங்கி தங்களின் நேர்த்திக் கடனைச் செலுத்துகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் தெய்வத்தால் அருளப்பட்ட நவக்கிரகங்களின் மீதும் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். சிலப்பதிகாரத்தில் சில கிரகங்களின் பெயர்கள் குறிப்பிடப்படுவது அங்குள்ள மக்கள் ஜாதகத்தின் மீதிலும் நம்பிக்கை கொண்டவர்கள் என என்ன இடமுண்டு .மலேசிய மக்கள் ஜாதகத்திற்கு பெருமளவில் நம்பிக்கை கொண்டவர்களாக

இருகின்றனர். திருமணம் காலங்களில் ஜாதகத்தை முழுமையாக நம்புகின்றனர். மேலும், மலேசியா இந்துக்கள் நவக்கிரக வழிபாடும் மேற்கொள்கின்றனர். கோயில்களில் அமைக்கப்பட்டிருக்கும் நவக்கிரகங்களைக் குறிப்பிட்ட அந்தந்த நவகிரகத்தின் ஏற்ற நாட்களுக்குச் சென்று வழிபடுகின்றனர் (Rajoo, 1975)[13].

சிலப்பதிகார மக்கள் தங்களின் தெய்வங்களிடம் வேண்டியது நிறைவேற நோன்பு எடுப்பதில் நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். தெய்வத்திற்காக எந்தவொரு உணவையும் உண்ணாமல் இருப்பார்கள். மலேசிய இந்து மக்களிடம் நோன்பு எடுக்கும் வழக்கமும் இருந்து வருகின்றது எனலாம். தைப்பூசம், ஐயப்பன் வழிபாடு போன்ற தெய்வ தொடர்புடைய வழிபாட்டின் போது காலை மாலை இரு வேலை மட்டும் நோன்பு எடுத்துத் தெய்வத்தை வணங்குகின்றனர் (Manimaran, 1995)[14].

சிலப்பதிகார மக்கள் தெய்வங்களுக்கு நிகழ்த்தும் வழிபாடுகளைத் தகுந்த நாட்களைப் பார்த்து வழிபடுகின்றனர். சித்திரை மாதத்தில் பௌர்ணமியும் சேர்ந்து வருகின்ற சித்ரா பௌர்ணமி நாளில் காவற்பூதத்துக் கோயிலின் வாயிலில் அமைந்த பலிபீடிகையில் மறக்குடி மகளிர் பூதத்தை வழிபடுகின்றனர். மலேசியா இந்து மக்களிடம் குறிப்பிட்ட சில நாட்களைப் பின்பற்றி தெய்வங்களை வழிபடும் முறை இருந்து வருகின்றது. அவ்வகையில் சித்திரை மாத பௌர்ணமியில் முருகனையும், ஆடி மாதத்தில் அம்மனையும் என்று சில குறிப்பிட்ட நாளில் தெய்வங்களை வணங்குகின்றனர்.

சிலப்பதிகார மக்கள் தெய்வத் தொடர்புடைய காரியங்களைச் செய்தால் வெறுமென செய்யாமல் வழிபாட்டுச் சாஸ்திரங்களை முறைகளைப் பின்பற்றி நடத்த வேண்டும் என நம்பிக்கை கொண்டுள்ளனர். வஞ்சிக் காண்டத்தில் பத்தினித் தெய்வமாகக் கருதப்படும் கண்ணகிக்குக் கோயில் எழுப்பும் பொழுது முறையான வழிபாட்டு விதிமுறைகளைப் பின்பற்றி கோயில் அமைகின்றனர். கண்ணகி சிலையை வடிக்க உயர்ந்த கல்லாக இமய மலையில் கொணர்ந்தும், முறைப்படி நீர்ப்படை செய்தும், சிலைக்கு உருவம் கொடுத்தும் அதன்பின் கண்ணகியின் படிமம் நிறுதி வழிபடுகின்றனர். மலேசியா இந்துக்களும் தெய்வக் காரியங்களை மேற்கொள்ளும் போது விதிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். கோயில் அமைக்கும் போது ஆகம சாஸ்திரப்படி கோயில்களைக் கட்டுகின்றனர் (Manimaran, 2008)[15]. மேலும், திருவிழாக்கள் நிகழ்த்தும் போது சரியான வழிபாட்டு முறையினை பின்பற்றியே இறுதியில் திருவிழாக்களை முடிக்கின்றனர். திருவிழாவின் போது கோயில்களில் முறையாகப் பூஜைகள் ஒன்றன் பின் ஒன்றாக நடத்தப்படுகின்றது.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் தெய்வங்களை மட்டும் குறிப்பிடாமல் அந்தத் தெய்வங்கள் கொண்டிருக்கும் சின்னங்களையும் அடையாளங்களையும் காண்பிக்கின்றது. சிலப்பதிகார மக்கள் தெய்வங்களை வணங்குவது மட்டுமின்றி தெய்வங்களின் சின்னங்களையும் அடையாளங்களையும் மதிக்கின்றனர் எனலாம். சிலப்பதிகார மக்களைப் போன்று மலேசியா இந்துக்கள் தெய்வ சின்னங்களையும் அடையாளப் பொருட்களை மதித்து வணங்குகின்றனர். நெற்றியில் திருநீர், கழுத்தில் ருட்ராச மாலையை அணிகின்றனர். மேலும், சிலர் பெருமாளின் அடையாளமான சுதர்சன சக்கரத்தையும் வலம்பூரி சங்கையும் வீட்டில் வைத்து வழிபடுகின்றனர். வேல் சூல வழிபாடும் வீட்டிலும் கோயில்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது. அம்மனின் அடையாளமிக்க மரமான வேப்பிலை மரம் மலேசியா இந்துக்களின் வீட்டில் பெரும்பாலும் காணப்படுகின்றது.

**சமயங்கள்**

சைவச் சமயத்திற்கு சிவனும், வைணவச் சமயத்திற்கு திருமால், சாக்தம் சமயத்திற்குச் சக்தியும், கௌமாரம் சமயத்திற்கு முருகனும், சௌரம் சூரியனுக்கும், இறுதியாகக் கணபாத்ய சமயத்திற்குக் கணபதியும் அடங்கும். சிலப்பதிகாரக் காப்பியத்தில் இந்த ஆறு சமயங்களைப் போன்று பிற சமயங்களாகச் சமணத்திற்கு அருகனையும், புத்த சமயத்திற்குப் புத்தர் தெய்வமும் காணப்பெருகின்றது.(இராமன், 2001)16 சிலப்பதிகாரக் காப்பியத்தில் ஆறு சமயங்களில் ஐந்து சமய தெய்வங்களாகச் சிலப்பதிகார மக்கள் வழிபாடு செய்துள்ளனர் எனலாம். சிவன், திருமால், முருகன், கொற்றவை, சூரியன் ஆகும். கணபதி தெய்வத்தைச் சிலப்பதிகாரக் காப்பியத்தில் வழிபாடு செய்தது குறிப்பு ஏதும் இல்லை.

மலேசியா நாட்டின் இந்துக்கள் சைவச் சமயத்திற்குச் சிவனும், சைணவச் சமயத்திற்குத் திருமால், சாக்தம் சமயத்திற்குச் சக்தியும், கௌமாரம் சமயத்திற்கு முருகனும், சௌரம் சூரியனுக்கும், இறுதியாகக் கணபாத்ய சமயத்திற்கு கணபதியும் வணங்குகின்றனர். கணபதி வழிபாடு சிலப்பதிகாரத்தில் இல்லை என்றாலும் மலேசியா நாட்டில் கணபதி தெய்வத்திற்குக் கோயில் அமைத்து வழிபடுகின்றனர். சிலப்பதிகாரக் காப்பியத்தில் குறிப்பிட்ட புத்த சமயம் பெரும்பாலும் சீனர்களால் மலேசியா நாட்டில் பின்பற்றப்படுகின்றது. மலேசியா நாட்டில் பல சமயங்கள் இருந்தாலும் இந்துக்கள் அனைத்துச் சமய தெய்வங்களை வணங்குபவர்களாக இருக்கின்றனர். பெரும்பாலன மலேசியாவில் அமைந்துள்ள கோயில்களில் அனைத்துச் சமயங்கள் சார்ந்த தெய்வங்கள் இருப்பதாக அமைந்துள்ளது.

**விழாக்கள்**

இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தில் மிக பரவலாகப் பேசப்படும் இந்திர விழா, காமன் விழா, கொற்றவை விழா, வெறியாட்டு விழா போன்ற விழாக்களைச் சிலப்பதிகார மக்களால் கொண்டாடப்படுவதைக் குறிப்பிட்டுள்ளார் (புலியூர்க் கேசிகன், 2014)[17]. சிலப்பதிகார மக்கள் மலேசியா நாட்டில் சிலப்பதிகாரக் காப்பியத்தில் குறிப்பிட்ட விழாக்கள் போன்று கொண்டாடப்படவில்லை. இருப்பினும் அந்த விழாக்களின் சாயல்களில் மலேசியா நாட்டில் அம்மனுக்குத் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றது. சிலப்பதிகாரக் காப்பியத்தைப் போன்று திருவிழாவின் மக்கள் தீக்குழி இறங்குகின்றனர். கண்ணகி மதுரை நகரை எரித்த நினைவில் திருவிழாவின் போது அக்கினிச் சட்டியையும் ஏந்துகின்றனர். கொற்றவை விழா மலேசியாவில் காளி தெய்வத்திற்குத் திருவிழாவும், பத்தினித் தெய்வத்திற்கு மாரியம்மன் திருவிழா என்றும் கொண்டாடப்படுகின்றது. வெறியாடுதல் திருவிழா போதே மலேசியா மக்களால் நிகழ்த்தப்படுகின்றது. மேலும், திருவிழா போது தெய்வங்களை அலங்கரித்து வீதி வலம் ஊர்வலமாகக் கொண்டு வரப்படுகின்றது.

**கண்டுபிடிப்புகளும் கலந்துரையாடலும்**

சிலப்பதிகாரக் காப்பிய தெய்வ கூறுகள் மலேசியா சமூகத்தோடு சில பொருந்தி வந்துள்ளது. சிலப்பதிகார மக்கள் பின்பற்றி வணங்கிய தெய்வங்கள், சமயங்கள், நம்பிக்கைகள் ஆகியன மலேசியா இந்திய சமூகத்தோடு மிகவும் பொருந்தி வந்துள்ளது.

மலேசியா இந்துக்கள் சிலப்பதிகார மக்களைப் போன்று இயற்கை தெய்வ வழிபாட்டிற்கு முக்கியம் கொடுப்பவர்களாக இருக்கின்றனர். மலேசியா நாட்டில் இந்துக்கள் நீர், சூரியன், சந்திரன் தெய்வமாகக் கருதி வழிபடுகின்றனர். மலேசியாவில் நீர் தெய்வத்தை ஒரு மாநிலத்தில் மட்டும் வணங்குகின்றனர். பொங்கலன்று சூரியனை, சந்திரன் முழு நிலாவாக இருக்கும் பௌர்ணமி நாளில் குறிபிட்ட தெய்வங்களை வழிபடுகின்றனர். சந்திரன் சூரியன் மலேசியா நாட்டில் பெரும்பாலும் நவக்கிரங்களில் வைத்து வழிபடுகின்றனர். மலேசியா சீன சமூகம் நீர், சந்திரன், சூரியன் ஆகிய இயற்கை தெய்வங்களைச் சிலப்பதிகார மக்களைப் போன்று கோயில் கொண்டும் வழிபடுகின்றனர்.

மலேசியர்கள் சிலப்பதிகார மக்களைப் போன்று சிவன், பெருமாள், முருகன், கொற்றவை (காளி) ஆகிய தெய்வங்களுக்குத் தனியாகக் கோயில்களை அமைத்து வழிபடுகின்றனர். ஆண்டுக்கு ஒரு முறை இந்தத் தெய்வங்களுக்குத் திருவிழாவும் நிகழ்த்தப்படுகின்றது. மேலும், மலேசியா இந்துக்கள் சிவன், பெருமாள், முருகன் ஆகியப் பெருந்தெய்வங்களைப் பிற தெய்வ கோயில்களில் இணைத்தும் வழிபடுவதனைக் காண இயலுகிறது.

மலேசியர்கள் பெருந்தெய்வங்களை வழிபடுவது போன்று சிறு தெய்வங்களையும் வழிபடுகின்றனர். முனீஸ்வரர், மாரியம்மன், காளி, முனியாண்டி, மதுரைவீரன் போன்ற தெய்வங்களை வழிபடுகின்றனர். பெரும்பாலான சிறு தெய்வங்கள் சாலை ஓரங்களிலும், முச்சந்தி, தோட்டப்புர எல்லை காவல் தெய்வமாக வணங்கப்படுகின்றது. சில சிறு தெய்வங்களுக்கு வருடந்தோறும் திருவிழாக்கள் எடுக்கப்பட்டு ஆடு, கோழி ஆகியனவைப் பலியிடப்படுகின்றது. மேலும், சைவமாக இருக்கும் தெய்வங்களுக்குப் பூசணிக்காய், எலுமிச்சை போன்றவைகள் பலியிடப்படுகின்றது. மலேசியா மக்கள் சிலர் சிறு தெய்வங்களை இல்லங்களில் சிறிய கோயில் அமைத்தும் வழிபடுகின்றனர். பெரும்பாலான மாரியம்மன் கோயில்கள் தோட்டப்புறங்களில் காணப்படுகின்றது. தீ மிதித்தல், கரகம் ஏந்தி வருதல், பால் குடம் ஏந்துதல் போன்றவைகள் மக்கள் விரும்பி தெய்வங்களுக்குச் செய்கின்றனர்.

சிலப்பதிகாரக் காப்பியத்தைப் போன்று மலேசிய சமூகத்தினரும் தெய்வங்களுக்கு நிவேதனப் பொருட்களைக் கொண்டு வழிபடுகின்றனர். மேலும், சிறுதெய்வங்களுக்குப் பலி கொடுத்து வழிபடும் பழக்கமும் காணமுடிகின்றது. மலேசியா நாட்டில் கோயில்களில் தெய்வங்களுக்கு மந்திரங்களை உச்சரித்து வழிபடுவது மட்டுமின்றி தியானம் செய்யும் முறையும் பின்பற்றப்படுகின்றது. மலேசியா நாட்டில் கூட்டுப் பிராத்தனையை வீடுகளிலும் கோயில்களிலும் செய்வது சில இடங்களில் வழக்கமாகக் கொண்டுள்ளனர். மலேசிய நாட்டில் கோயில்களில் தெய்வங்களுக்குச் சமர்ப்பிக்கப்படுவது மட்டுமல்லாமல் தெய்வங்களின் நாமங்களையும் கோயில்களில் உச்சரிக்கப்படுகின்றது. மலேசியா பெருந்தெய்வம் சிறு தெய்வ கோயில்களில் யாகம் (வேள்வி) வளர்த்து வழிபாடு செய்யப்படுகின்றது. விளக்கேற்றும் வழக்கம் மலேசியா இந்து மக்களிடம் பெருமளமில் உள்ளது வீடுகளில் காலை மாலை வேளைகளில் விளக்கேற்றி தெய்வங்களை வணங்குகின்றனர்.

வெறியாடுதல் குறிப்பாகச் சிறுந்தெய்வங்களின் மூலம் மலேசியா நாட்டில் நிகழ்த்தப்படுகின்றது. மலேசியா மக்கள் பிறர் நலன் கருதி தெய்வங்களிடம் வேண்டுதல், நல்ல நேரம் பார்த்தே காரியங்களை நடத்துதல், சிலர் புலாலைத் தவிர்க்கின்றனர். மேலும், மலேசிய மக்கள் ஜாதகத்திற்குப் பெருமளவில் நம்பிக்கை கொண்டும், தெய்வங்களுக்கு நோன்பு எடுக்கும் வழக்கம் கொண்டவர்களாக இருக்கின்றனர். மலேசியா இந்து மக்களிடம் குறிப்பிட்ட

சில நாட்களைப் பின்பற்றி தெய்வங்களை வழிபடும் முறை இருந்து வருகின்றது. தெய்வக் காரியங்களை மேற்கொள்ளும் போது விதிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். மேலும், கோயில் அமைக்கும் போது ஆகம சாஸ்திரப்படி கோயில்களைக் கட்டுகின்றனர். மலேசியா இந்துக்கள் தெய்வ சின்னங்களையும் அடையாளப் பொருட்களை மதித்தும் வணங்குகின்றனர்.

மலேசியா நாட்டில் இந்துக்கள் சைவ சமயத்திற்குச் சிவனும், வைணவ சமயத்திற்குத் திருமால், சாக்தம் சமயத்திற்குச் சக்தியும், கௌமாரம் சமயத்திற்கு முருகனும், சௌரம் சூரியனுக்கும், இறுதியாகக் கணபாத்ய சமயத்திற்குக் கணபதியும் வணங்குகின்றனர். கணபதி வழிபாடு சிலப்பதிகாரத்தில் இல்லை என்றாலும் மலேசியா நாட்டில் கணபதி தெய்வத்திற்குக் கோயில் அமைத்து வழிபடுகின்றனர். சிலப்பதிகாரக் காப்பியத்தில் குறிப்பிட்ட புத்த சமயம் பெருபாலும் சீனர்களால் மலேசியா நாட்டில் பின்பற்றப்படுகின்றது. மலேசியா நாட்டில் சிலப்பதிகாரக் காப்பியத்தில் குறிப்பிட்ட விழாக்கள் போன்று கொண்டாடப்படவில்லை. இருப்பினும் அந்த விழாக்களின் சாயல்களில் மலேசியா நாட்டில் விழாக்கள் கொண்டாடப்படுகின்றது. கொற்றவை விழா மலேசியாவில் காளி தெய்வத்திற்குத் திருவிழாவும், பத்தினித் தெய்வமான மாரியம்மனுக்குத் திருவிழா என்றும் கொண்டாடப்படுகின்றது. வெறியாடுதல் திருவிழா போதே மலேசியா மக்களால் நிகழ்த்தப்படுகின்றது.

சிலப்பதிகார மக்கள் பல தெய்வங்களை வழிபடும் கொள்கையைப் பின்பற்றுவது போல மலேசியா மக்களும் அதன் அடிப்படையின் வழிபாட்டினை மேற்கொள்கின்றனர். தனக்கென்று ஒரு தெய்வ வழிபாட்டினை வைத்துக் கொள்ளாமல் நிறைய தெய்வங்களை வழிபடுகின்றனர் எனலாம். உலக அளவில் இயற்கை சீர்க்கேடு நிகழ்ந்தாலும் மலேசியா நாட்டில் சில இடத்தில் இயற்கையை மதித்து வழிபடுதலையும் காண முடிகின்றது. இருப்பினும், மலேசியாவில் இன்னும் நீர்த் தூய்மைக்கேடு, நிலத் தூய்மைக்கேடு, காடுகளை அழித்தல் போன்ற நடவடிக்கைகள் நிகழ்கின்றன. சிலப்பதிகாரக் காப்பியத்தில் குறிப்பாகச் சிறுதெய்வங்கள் குறிப்பிட்ட இடங்களில் வழிபட்டாலும் மலேசியா நாட்டில் அனைத்து இடங்களில் பல தெய்வங்களை வழிபடுவதனைக் காண இயலுகின்றது. சிலப்பதிகாரக் காப்பியத்தில் உள்ள மக்கள் இயற்கையின் மேல் அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றனர். மலேசிய இந்துக்கள் இன்னமும் சரியான தெய்வ வழிபாட்டு முறையினைப் பின்பற்றுவதில் சற்றுப் பிந்தங்கிய நிலையில் தான் உள்ளனர். கோயில்களுக்குச் செல்லும் போது சரியான கலாசார உடை அணியாமல் செல்வதும், பல குற்றச்செயல்களைத் திருவிழாக் காலங்களில் மேற்கொள்கின்றனர்.

மேலும், பிற இனத்தவர்கள் நம் மதத்தினைக் கேளி செய்யும் அளவிற்கும் தள்ளப்படுகின்றனர். இந்த மாதிரியான பிரச்சனைகள் சிலப்பதிகாரக் காப்பியத்தில் இல்லாதது நமது இந்து மதத்தினை மேலும் பெருமை சேர்க்கின்றது. இப்படிப்பட்ட தெய்வங்களைக் கொண்ட காப்பியமாகச் சிலப்பதிகாரம் திகழ்வதனால் பிற்காலத்தில் நமது தொன்மையான சமூகத்தின் தெய்வம் தொடர்புடைய விவரங்களை எடுத்துக்கூறும் காப்பியமாகச் சிலப்பதிகாரம் அமையும் என்று ஐயமில்லை. குறிப்பிட்ட சில மலேசியா இந்தியர்கள் செய்யும் தவறுகள் நமது சமயத்தை மாசு படுத்தினாலும் ஒட்டுமொத்தமாக மலேசியாவில் வாழும் இந்தியர்கள் தெய்வங்களை நம்பிக்கையுடன் வணங்குகின்றனர் எனலாம். பிற இனத்தவர்கள் நமது மதத்தினைக் காரணம் தெரியாமல் கேளி செய்வதனைச் சிலப்பதிகாரக் காப்பியம் மூலம் இந்த ஆய்வு ஒரு முழு விடையாக அமையும். நமது தெய்வ வழிபாடு காலங்காலமாகத் தொன்று தொட்டு வந்தனால் இதனை மதித்து நாம் பின்பற்றுதல் வேண்டும். இறைவன் மீது நம்பிக்கை வைத்தல் என்ற தேசியக் கோட்பாட்டின் படி நாம் என்றும் தெய்வத்தைப் போற்றி வணங்க வேண்டும்.

**முடிவுரை**

சிலப்பதிகாரக் காப்பியத்தில் காணப்பெறும் தெய்வ கூறுகள் பெருமளவில் மலேசியா இந்து மக்களிடையே பொருந்தி வருகின்றது. மலேசியா இந்துகள் காலங் காலமாக நம் முன்னோர்கள் வழிபட்ட முறைகளைப் பின்பற்றி வந்துள்ளனர். இருப்பினும், சில மலேசியா இந்துகள் இன்றூம் சில தீய நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் நம் சமயத்திற்கு தீங்கு நிகழ்கின்றது. ஆய்வில் பெறப்பட்ட அனைத்துத் தெய்வ தொடர்புடைய தரவுகள் ஒரு வரலாறாக அமைவதனால் காலங் காலமாக வரும் சந்ததியினர் அதன் அவசியத்தை அறிந்தவர்களாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. சிலப்பதிகாரக் காப்பியத்திலும் மலேசியா நாட்டிலும் தெய்வம் தொடர்புடைய விவரங்களை மட்டும் ஆய்வு செய்தது பாமர மக்களுக்குத் தெய்வத்தின் மீது அதிக நம்பிக்கை வருவது உண்மை.

**துணைநூற்பட்டியல்:**


1. Bakthavatchala Barathi. (2011). *Paṇpāṭṭu māṉiṭaviyal [Cultural Anthropology]*. Thiruchi: Adaiyalam Publications.
2. Vengadavan. (1998). *Vaḻipāṭṭuc caṭaṅkukaḷum palaṉkaḷum [Praying Ritual and Benefits]*. Chennai: Thamilarasi Publications
3. *Kebakaran hutan hujan Amazon beri kesan buruk). [Amazon Rain Forest Fire Make A Negative Impact]*. (2019, Ogos 23). Retrieved from https://www.sinarharian.com.my/article/44345/GLOBAL/Kebakaran-hutan-hujan-Amazon-beri-kesan-buruk.
4. Aruna, P. (2013, Ogos 15*). Kod Pakaian Bukan Wajib Tetapi Permintaan Hormati Tempat Ibadat Batu Caves [Clothing Code Not Required But Is Request To Respect Place of Worship in Batu Caves*]. Retrieved from https://www.mstar.com.my/lokal/semasa/2013/08/15/kod-pakaian-bukan-wajib-tetapi-permintaan-hormati-tempat-ibadat-batu-caves
5. *Laporan Penuh Tentang Rusuhan Kuil Sri Maha Mariamman Seafield [Full Report on The Riots In Temple of Sri Maha Mariamman Seafield]*. (2018, November 29). Retrieved from https://www.milosuam.net/2018/11/laporan-penuh-tentang-rusuhan-kuil-sri.html#axzz671CQMUtI
6. *Council's Ponggal Fest Celebrates Diversity*. (2019, Februari 16). Retrieved from https://www.thestar.com.my/metro/metro-news/2019/02/16/councils-ponggal-fest-celebrates-diversity
7. Alagesh, T. N. (2017). *Pongal: Celebrating Bounty and Prosperity.* Retrieved from https://www.nst.com.my/news/2017/01/204320/pongal-celebrating-bounty-and-prosperity
8. Puliyur Kesigan. (2014). *Cilappatikāram [Silapathikaram]*. Chennai: Saratha Publications.
9. Manimaran, S. Sivapalan, K. & Rajantheran, M. (2013). *Malēciyat tamiḻariṭaiyē kulateyva vaḻipāṭu: Tōṟṟamum toṭarcciyum [Origin and the Development of Family Worship among Malaysian Tamils]*. Kuala Lumpur: University of Malaya).
10. Christina Low. (2019). *Day of Devotion and Giving Back*. Retrieved from https://www.thestar.com.my/metro/metro-news/2019/01/22/day-of-devotion-and-giving-back.

11. Puliyur Kesigan. (2014). *Cilappatikāram [Silapathikaram]*. Chennai: Saratha Publications.
12. Audrey Dermawan. (2017, Jun 14). *200 Join in Candlelight Vigil for Nhaveen, Pray for Miracle and Speedy Recovery*. Retrieved from https://www.nst.com.my/news/nation/2017/06/248943/200-join-candlelight-vigil-nhaveen-pray-miracle-and-speedy-recovery
13. Rajoo, R. (1975). *Patterns of Hindu Religious Beliefs and Practices among the People of Tamil Origin in West Malaysia*. Dissertation (M.A.) Faculty of arts and Social Sciences. University of Malaya.
14. Manimaran S. (1995). *Religion and Beliefs Among Hindus: A Study In The District of Kuala Selangor (Agama dan Kepercayaan di Kalangan Penganut Hindu: Satu Kajian di Daerah Kuala Selangor).* Dissertation (M.A.) Faculty of arts and Social Sciences. University of Malaya.
15. Manimaran, S. (2008). *Hindu Temple Architecture and Sculptures*. Kuala Lumpur: University Malaya Press.
16. Raman, P. (2001). *Iṟai vaḻipāṭṭil intukkaḷ [The Worship of God by Hindus]*. Malaysia: Hema Publications.
17. Puliyur Kesigan. (2014). *Cilappatikāram [Silapathikaram]*.Chennai: Saratha Publications.